உ

# திருச்சிற்றம்பலம்

## நற்கருங்குழி சித்தி விநாயகர்



வள்ளலார் இளைஞர் மன்றம்
வடலூர் & கருங்குழி.



Scanned by CamScanner

1. கணபதி யார்?
பிரதம மகா கிருஷ்ட்டியில் சிவ மூர்த்தியின் திருவருளால் உதித்தவர்
2. அவரது நிலைப்பாடு என்ன?
செந்தாமரையில் பத்மாசனராய் ஐந்து திருக்கரங்களை உடைய மூர்த்தி.
3. அவரது சிறப்பு?
தேவர் முதலியவர்களுக்குத் தலைவராய் முடிசூட்டப்பட்டவர்.
4. அப்புறம்?
அகத்தியரது கமண்டலத்தில் இருந்த நீரை இந்திரன் வேண்டுகோளால் காவிரி நதியாய்ப் பெருகச் செய்தவர்
குமரக் கடவுளுக்காக வள்ளி நாயகியைச் சேர்த்தவர்
5. மற்றும்?
அவ்வை முதலிய பலரால் புகழப்பெற்றவர்
6. மேலும்?
திரிபுர தகன காலத்தில் கணபதியைத் துதிக்காமல் போருக்குப் புறப்பட்ட



போது தேரின் அச்சினை முரித்தவர்
7. இவரை மட்டும் தனியாக வணங்கி வழிபடுபவர்கள் இருக்கிறார்களா?
ஆமாம், அவர்கள் காணாபத்திய சமயத்தினர்
8. இவரது தகுதி?
இவரே பிரபஞ்ச கர்த்தா
9. துணைவியார்?
இச்சாசக்தி கிரியா சக்தி
10. அப்படி என்றால்?
சித்தி புத்திகள்
11. இவரைப் பூசிக்கும் (புண்ணிய) காலம்?
ஆவணி மாத தேய்பிறையில் சதுர்த்தியன்று பூசித்தால் சிறப்பு
12. இந்த விரதம் எப்படி வந்தது?
முருகப் பெருமான் முனிவர்களுக்கு அறிமுகப்படுத்தியதால் வந்தது
13. இவரை வணங்குவதால் என்ன பயன்?
இடையூறுகள் நீங்கும் சங்கடங்கள் அகலும் நிம்மதி உண்டாகும்
14. வள்ளல் பெருமான் கணபதியை வழிபட்டு உள்ளார்களா?



Scanned by CamScanner

ஆமாம்

15. எங்குள்ள விநாயகர்?
நற்கருங்குழியில் உள்ள சித்தி விநாயகர்

16. நற்கருங்குழி என்று ஏன் கூறியுள்ளார்கள்?
வள்ளல் காலத்தில் ஒன்பது ஆண்டுகள் உறைவிடமான இடம் மற்றும் மாமிசம் உண்ணாத திருவூர் ஆதலால்

17. அதனால் என்ன சிறப்பு?
அதனால் கொலை புலை செய்யாதவர்கள் கருங்குழி மக்கள்

18. கொலை என்பது?
எறும்பைக் கூட தன் உயிராகக் கருதுவது

19. அதனால்?
எந்த உயிரையும் கொலை செய்துவிடக்கூடாது

20. அப்புறம்?
மாமிசம் இறைச்சி சாப்பிடக் கூடாது



21. அப்படி நடந்தால்?
நன்மைகள் பெருகும், தீமைகள் குறையும், அதனால் தான் நற்கருங்குழி என்ற பெயர் வந்தது

22. ஐயாகாலத்தில் கருங்குழியில் வாழ்ந்தவர்கள் மாமிசம் உண்ணாது வாழ்ந்தவர்களா?
ஆமாம்.

23. அதை எப்படி அறிவது?
தைப்பூசப் பல்லக்குச் சித்திவளாகம் செல்லும் போது அவர்கள் காட்டும் பக்த்திச் சிரத்தையால்

24. அதனால்?
திருமருதூர் நற்கருங்குழி சித்திபுரம் (வடலூர்) என்னும் பார்வதிபுரம் சித்திவளாகம் என்னும் மேட்டுக்குப்பம் என்று பெயர் வழங்குவதால் அறியலாகும்

25. கருங்குழியில் என்னென்ன ஆயலங்கள் உள்ளன?
கணபதி ஆலயம், திருமுருகன் ஆலயம், சிவபெருமான் ஆலயம் திருமால் ஆலயம் முதலியன.



Scanned by CamScanner

26. வள்ளல் ஐயா அவைகளை வழிபடுவார்களா?
ஆமாம், சிறப்பாகச் சித்திவிநாயகர் ஆலயம்

27. வள்ளல் நற்கருங்குழியில் வாழ்ந்த காலத்தில் மேலும் என்ன செய்துள்ளார்கள்?
தண்ணீரால் திருவிளக்கு தொடர்ந்து எரியும்படி இறைவர் செய்வித்தார்

28. ஓகோ?
ஆமாம்

29. அப்புறம்?
சன்மார்க்க சங்கத்தை ஏற்படுத்தினார்கள்

30. எப்போது?
1865ல்

31. எந்த நாளில்?
சித்திரை வருடப்பிறப்பில்

32. மேலும்?
சித்திபுரம் என்னும் பார்வதிபுரத்தில் ஜோதி வழிபாட்டுத் திருச்சபை உண்டாக்கித்தர விரும்பினார்கள்

33. எத்தனை வருடம் தங்கினார்கள்?



சுமார் 9 வருடம்

34. அங்கு இப்போது என்ன உள்ளது?
வள்ளல் தண்ணீரில் விளக்கு எரித்த இல்லம் உள்ளது

35. மேலும்?
தான தருமங்கள் நடைபெறுகின்றன

36. உதாரணம்
கருங்குழி பாலுரெட்டியார்க்கு உண்டான புற்று நோயை நீக்கினார்கள்

37. அதனால்?
அவர் சொத்து முழுவதும் வள்ளல் பெயருக்கே தானம் செய்ய விரும்பினார்

38. பெருமான் அதனை?
பெருமாள் கோயிலுக்கு எழுதி வைத்து ஆலய வளர்ச்சிக்கு உதவினார்கள்

39. விநாயகர் மீது எத்தனை பாடல்கள் பாடினார்கள்?
38 பாடல்கள்

40. அதன் பெயர்கள்?
1.சித்தி விநாயகர் பதிகம் பிரசாத



Scanned by CamScanner

மாலை வல்லபை கணேசர் மாலை,
கணேசத் திருவருள் மாலை,
தனித்திருமாலை முதலியன

41. நீர் விரும்பும் பாடல்?
திருவும் கல்வியும் என்று தொடங்கும் பாடல்

42. அதில் கூறப்பட்டுள்ள செய்திகள்?
பலப்பல

43. சிலவற்றைக் கூறும்?
அன்பர்கள் துன்பம் விலகும்

44. அப்புறம்?
சமயப்பற்று நீங்கும்

45. அப்படியானால்?
மதப் பிராந்தியும் நீங்கும்

46. அப்படிக் கூடவா வள்ளல் பெருமான் பாடியுள்ளார்கள்?
ஆமாம், கவனமாகப் படியும் தெரியவரும்

47. கணபதி நிலைப்பாடு பற்றி ஐயா என்ன கூறுகிறார்கள்?
கணபதி சச்சிதானந்த வடிவினர் என்று.



48. பயன்?
அடியவர் உள்ளத்து தித்தித்து ஊறும் அமுதமானவர் என்பது

49. அடடே?
ஆமாம் நடுநிலையில் இருந்து படித்துப்பாரும் தெரியவரும்

50. தொடர்ந்து?
காசி மாநகரில் வீடுகள் தோறும் விருந்துண்டவர்

51. அதனுடன்?
வல்லபையின் நாயகர்

52. மேலும்?
பெருவயல் ஆறுமுகனுக்கு அருள் வழங்கியவர்

53. அத்துடன்?
குருவும், தெய்வமும் ஆகி பக்தர்களின் குறைகளைப் போக்குபவர்

54. அவரது பீடம்?
பரநாத முடிவுக்குமேல்

55. அங்கிருந்து என்ன செய்வார்?
அருள் ஒளி வழங்குவார்



Scanned by CamScanner

56. வழங்கியதற்கு ஓர் உதாரணம்?
திருமாலின் சாபத்தை நீக்கியவர்

57. அது என்ன சாபம்?
பாம்பாகச் சபிக்கப்பட்டார்

58. ஏன்?
எல்லை மீறியதால்.

59. அதனால்?
வேண்டும் வாழ்வு தருபவர் விநாயகர்

60. மற்றும்?
பஞ்சமா பாதகம் சூழ்ந்தாலும்
அதனையும் நீக்கி அருள் தருபவர்
விநாயகர்

61. எப்படித் தருவார்?
நாக்கு தழும் பேறத் துதித்தால்
தருவார்

62. மேற்கொண்டு?
அவர் புண்ணியமூர்த்தி

63. அதனால்
வீம்பு செய்திருந்தாலும் வெறுப்பு
அடைய மாட்டார்

64. அடையாளம்?
தம்பிக்கு அருளியது போல் நமக்கும்



அருள்வார்

65. என்னவென்று?
காமம் சூழாமல் காப்பாற்றுபவர்

66. அதற்கு வழி?
விடாமல் அவரைத் தோத்திரம்
செய்தால் போதும்

67. அவரது அழகு?
பிறை சூடிய பெருந்தகையாளர்

68. அப்புறம்?
சிவனைப் போல் செஞ்சடை உடையவர்

69. தொடர்ந்து?
வல்லமைக்கு வாய்த்த நற் கணவர்

70. அப்புறம்?
ஐந்து கரங்கள் உடையவர்.

71. தோடர்ந்து?
துவளும் திருவாயினை உடையவர்

72. பிறகு?
முக்கண் மூர்த்தி

73. சிறப்பாக?
அருட்சிவ மூர்த்தி



Scanned by CamScanner

74. ஓ ஹோ அத்துடன்?
புண்ணிய மூர்த்தி

75. பின்பு?
கங்கை சூடும் புகழும் உடையவர்

76. அவரை?
உலகமக்கள் புகழ்ந்து போற்றுவார்கள்

77. போற்றி?
குறைகளைப் போக்கும் படி வேண்டிக் கொள்வார்கள்.

78. தீதினை?
ஐம்புலன்களையும்நல்வழிபடுத்துபவர்

79. அவரது தகுதி?
குங்குமம் ஒட்டுவது போல் நம்மிடம் ஒட்டிக்கொண்டு ஒன்றுபவர்

80. மற்றும்?
பரம்பொருள்

81. அவர் செய்வது என்ன?
உள்ளத்தில் தித்தித்து ஓங்குபவர்

82. மேலும்?
கொன்றை மாலை சூடியவர்

83. அது ஏன்?
அது தகப்பனார் தகுதியாகும்



84. மேலும் உள்ள தகுதி?
பாவம் நீங்க அருள் புரியும் பசுபதி.

85. வடிவம்?
பிரணவ வடிவம்

86. சொருபம்?
யானை முகம் உடையவர்

87. தன்மை?
யாவருக்கும் இரங்கி அருள்புரிபவர்.

88. எப்படி?
முதலில் துக்கம் துன்பம் நீக்குபவர்

89. அப்புறம்?
இன்பம் ஈந்திடுபவர்

90. மற்றும்?
நன்மைகளை உண்டாக்குபவர்

91. அடிகள் என்றால்?
தெய்வம்

92. அத் தெய்வத்தை?
புகழ்ந்தாலே போதும்

93. புகழ்ச்சியால் என்ன கிடைக்கும்?
புண்ணியர் ஆவோம்

94. அதன் படி?
அவரைப் பலரும் வணங்குவர்



Scanned by CamScanner

95. எப்படி?
தோத்திரம் செய்து

96. தோத்திரம் எப்படி செய்ய வேண்டும்?
வாய்திறந்து மனம் ஒன்றி உருகி பாட வேண்டும்

97. சான்று?
வாயார வாழ்த்துகின்றோர் மனத்து அமர்ந்து அருளும் தெய்வம் ஆவார் என்பதே

98. வாயார வாழ்த்த முடியவில்லை?
பிள்ளையார் சுழி போட்டு வணங்கலாம்

99. பிள்ளையார் சுழி என்றால் என்ன?
அருள் மகன் என்பது பொருள்

100. அருள் மகன் என்பதின் அடையாளம்?
ஏழு உலகமும் காப்பாற்றி அருள்வது.

101. அதற்கு என்ன செய்ய வேண்டும்?
தாயைத் தேடி அழும் குழந்தையாக வேண்டும்

102. அவரால் கிடைக்கும் நன்மை?
செல்வம், கல்வி, புகழ், உயர்வு, பாடும் திறமை



103. அப்படியா?
அத்துடன் நமது தேகம் கூட அழகு தேகம் ஆகும்

104. தொடர்ந்து?
நல்லொழுக்கம் நிலைபெறுமாம்

105. நிலைபெற்று?
ஊக்கம் நல்உணர்ச்சி பெருகுமாம்

106. அவரது பீடம்?
புறத்தில் ஆலயம், அகத்தில் உள்ளம்.

107. அதனால்?
அவர் அனைவரக்கும் சற்குரு நாதர்.

108. ஒகோ?
ஆமாம்.

திருச்சிற்றம்பலம்



Scanned by CamScanner

கலைநிறை கணபதி சரணம் சரணம்

கஜமுக குணபதி சரணம் சரணம்

திருச்சிற்றம்பலம்

K.S பிரிண்டர்ஸ், வடலூர். செல்: 9443576739

Scanned by CamScanner